

# இலங்கை

# இடைமாற்றுக்கால விவகாரங்கள் மற்றும் முன்முயற்சிகள் குறித்த விடய ஆய்வு


ajar
asia justice and rights

Transitional Justice
Asia Network

SURIYA
Women's Development Centre

இடைமாற்றக்கால நீதி: இலங்கை விடய ஆய்வு

ஆசியாவில் நீதி மற்றும் உரிமைகள் அமைப்பு மற்றும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

ajar asia justice and rights

TRANSITIONAL JUSTICE ASIA NETWORK

SURIYA Women's Development Centre


பதிப்பு

2017 அக்டோபர் 01


### ஆசியாவில் நீதி மற்றும் உரிமைகள் அமைப்புக் குறித்து

ஆசியாவில் நீதி மற்றும் உரிமைகள் அமைப்பு (AJAR) இந்தோனேஷியாவில், ஜகார்த்தாவில் அமைவுற்றதும், ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் வகைப்பொறுப்பை வலுப்படுத்துவதற்கும் மனித உரிமைகளுக்கான மதிப்பை வலுப்படுத்துவதற்கும் பணியாற்றும், ஓர் இலாப நோக்கற்ற அமைப்பாகும். AJAR நீண்டகால மோதல் முரண்பாடுகள், சர்வாதிகாரங்கள் மற்றும் எதேச்சாதிகார ஆட்சிக் குழுக்களின் அனுபவத்தின் பின்னர் ஒரு ஸ்திரமான ஜனநாயகத் தளத்தைக் கட்டியெழுப்பும் நாடுகளில் கவனஞ்செலுத்திப் பணியாற்றி வருகின்றது. AJAR தண்டனைப் பயமின்மை, ஊழல் மற்றும் மனித உரிமைமீறல் விவகாரங்களுக்குத் தீர்வுகண்டால் மாத்திரமே சமாதானமும், ஜனநாயகமும் நிலைபேறாகுமென்று நம்புகின்றது. AJAR வெற்றிக்கு அவசியமான திறன்கள், அறிவு மற்றும் அவசியமான மூலவளங்களையும் அதிகரிப்பதன்மூலம் மனித உரிமைமீறல்களையும், தண்டனைப் பயமின்மையையும் முடிவுறுத்துவதற்குப் பணியாற்றுவோருக்கு அதிகார வலுவளிக்க விரும்புகின்றது. மேலும் தகவல்களுக்கு http://asia-ajar.org/. வெப்தளத்துக்கு வருகைதரவும்.

### சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தைப்பற்றி

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் கொழும்பிலும், அதைச் சுற்றியும் அமைந்திருந்த நலனோம்புகை நிலையங்களைச் சேர்ந்த பெண்களின் விசேட தேவைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் உருவாக்கப்பட்டதாகும். சூரியா, பெண்கள் மற்றும் சிறுவர்களின் நடைமுறைசார் பால்நிலைக் குறித்துரைப்பான தேவைகளுக்குப் பிரதிவினை காண்பிக்கின்றது. அது அவர்கள், இழப்பு, பயம் மற்றும் புதிய சூழலில் வாழ்க்கையைக் கையாளும் சவால்களை ஏற்றுக் கையாளுவதற்கு ஆதரவு வழங்குகின்றது. சூரியா இப்பொழுது இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் பெண்களின் குரலாகவும், அவர்களுக்கான குரலாகவும் செயற்படுவதோடு, சகல பெண்களினதும் கண்ணோட்டங்களையும் முன்னிலைக்குக் கொண்டுவருவதில் துடிப்பான பாத்திரத்தை வகித்துவருகின்றது. சூரியா, பால்நிலை அதிகார வலுவளித்தல், அபிவிருத்தி மற்றும் கலாசார, நிகழ்ச்சித்திட்டங்களினூடாக தமிழ் மற்றும் முஸ்லிம் ஜனசமூகங்களைச் சேர்ந்த பெண்களுடனும், அவர்களுக்காகவும் பணியாற்றுவதற்குத் தன்னை அர்ப்பணித்துள்ளது. அது பெண்களுக்கெதிரான பாரபட்சங்களற்ற, ஒப்புரவான, சமாதான சமுதாயத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் தகவல்களுக்கு http://suriyawomen.org. வெப்தளத்திற்கு வருகை தரவும்.

### இடைமாற்றக்கால நீதி ஆசியா வலையமைப்பு

இடைமாற்றக்கால நீதி ஆசியா வலையமைப்பு இடைமாற்றக்கால நீதி மற்றும் பிராந்திய வகைப்பொறுப்பு முன்னெடுப்புகள்மீது கட்டியெழுப்பப்படும் கற்றல் மற்றும் அறிவுக்கான ஏற்பாட்டு வசதிகளை வழங்குகின்றது.

### அட்டைப் புகைப்படங்கள்

முன்அட்டை (இடமிருந்து வலமாக)

1. ஒரு பெண் 2009 க்குப் பின்னர் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட தனது கிராமமாகிய (முல்லைத்தீவு மாவட்ட) கோப்பாபிலவின் கையால் வரையப்பட்ட விபரப்படத்தைக் காண்பிக்கின்றாள். இவர்கள் முகாமுக்கு வெளியே 200 நாட்களுக்கு மேலாகத் தொடரான எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். சூரியா, அவர்களின் முயற்சிகளுக்கும், போராட்டத்துக்கும் ஆதரவு வழங்குகின்றது. (புகைப்படம் உதவி: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்)
2. முஸ்லிம் மற்றும் தமிழ்ப் பெண்களிடையே இடம்பெறும் சமைத்தலும், உணவுபகிர்தலும். முஸ்லிம் சமூகம் 1990 இல் LTTE அமைப்பினால் முல்லைத்தீவிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டது. இவர்கள் 2012 இல்தான் திரும்பிவர முடிந்தது. (புகைப்படம் உதவி: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்)

பின்பக்க அட்டை:

வட இலங்கையில் முல்லைத்தீவில் யுத்தத்தில் உயிர்பிழைத்தோர் TJAN நிபுணர்களால் ஒழுங்குசெய்யப்பட்டது. (புகைப்படம் உதவி: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்)

# 1. சமூக வரலாற்றுச் சூழமைவு

அனேக சந்தர்ப்பங்களில் பயங்கரவாதத்துக்கெதிரான யுத்தமொன்று அரசினால் விபரிக்கப்பட்ட இலங்கையின் சிவில் யுத்தம், 2009 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டதோடு முடிவுக்கு வந்தது. எவ்வாறாயினும், வேறு வடிவங்களில் மோதல் தொடருகின்றது. இது பெரும்பான்மை சிங்கள, பௌத்த தேசியவாதம் அரசைக் கைப்பற்றியுள்ளமை, இலங்கைத் தமிழர்களின் அரசியல் சமத்துவம், கௌரவம் மற்றும் தன்னாட்சி என்பவற்றுக்கான கோரிக்கைகள் மறுப்பு, மற்றும் இனத்துவ, மத சிறுபான்மையினங்கள் ஓரங்கட்டப்பட்டு நிறுவனமயப்படுத்தல் உள்ளிட்டவகையில் பிரதானமாக இனத்துவ அரசியல் அடையாளத்தினூடாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

சுதந்திரத்துக்கு முன்னரும், விசேடமாக சுதந்திரத்துக்குப் பின்னரும் இலங்கையின் இனத்துவ முரண்பாடு இலங்கைத் தமிழர்கள், இந்திய வம்சாவளித் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் ஏனைய இனத்துவ-மதச் சிறுபான்மையினர்களுக்கெதிரான முறைமையான ஓரங்கட்டல், மற்றும் ஒழுங்கமைவுபெற்ற வன்செயல் என்பவற்றினூடாக நோக்கப்படுதல் வேண்டும். காணிப் பகிர்வு, பல்கலைக்கழக அனுமதி, அரசாங்க வேலைகள் மற்றும் ஏனைய அரச மூலவளங்களைப் பெற்றுக்கொள்ளுதல் உள்ளிட்டவகையிலான அரசியல் பொருளாதார முரண்பாடுகள் குறிப்பாக 1977 இன் பின்னர், பொருளாதார மறுசீரமைப்புகள் அடக்குமுறை, ஜனநாயக விரோத அரசின் தோற்றத்துக்கு வழிசமைத்ததால் குறிப்பாக முக்கியத்துவம் பெற்றன.

சிங்கள-தமிழ் பிளவுகளுக்கப்பால், அனேக சந்தர்ப்பங்களில் சிறுபான்மையினங்களுள் இடம்பெறும் மோதல்கள் மறக்கப்படுகின்றன. இது இலட்சக்கணக்கினரான இந்திய வம்சாவளி மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதில் ஆரம்பித்தது. இவர்கள் 19 ஆம் நூற்றாண்டில் பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்குக் கொண்டுவரப்பட்டோராவர். இலங்கைத் தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர்கள் இவர்களின் வாக்குரிமையைப் பறிப்பதற்கு ஆதரவளித்தனர். முஸ்லிம்களுக்கெதிரான பெருமளவிலான LTTE விடுதலைப் புலிகளின் வன்செயல்களும், இதன் காரணமாகப் பின்னரெழுந்த தமிழ், முஸ்லிம் பதற்றநிலைகளும் இந்த முரண்பாட்டின் ஏனைய பரிமாணங்களாகும். 1987 இல் இடம்பெற்ற இந்திய இராணுவத் தலையீட்டைத்தொடர்ந்து, வன்செயல் இடது தேசியவாத மக்கள் விடுதலை முன்னணி அரசியற் கொலைகள், ஆட்கள் காணாமற்போதல் என்பவை உள்ளிட்ட அரச விரோதக் கிளர்ச்சிகளைத் தெற்கில் ஆரம்பித்தனர். எதிர்க் கிளர்ச்சிவாதச் செயற்பாடுகளில் பின்னர் மேலும் ஆயிரக்கணக்கானோர் காணாமற் போயினர் அல்லது கொல்லப்பட்டனர்.

2009 மே மாதத்தில் யுத்தத்தின் முடிவு ஓர் எதேச்சாதிகார, இராணுவமயப்படுத்தப்பட்ட சிங்கள, பௌத்த ஆட்சியைக் கொணர்ந்தது. ஜனநாயகவிரோத அம்சங்கள் அரசியல் சாசனத்தினுள் கொண்டுவரப்பட்டன அல்லது அவற்றுக்குச் சட்டநிலைத்தகவு வழங்கப்பட்டது. அதேவேளையில், அடக்குமுறை அரசு மற்றும் அரசு அல்லாத வன்செல் செயற்பாட்டாளர்கள் அதிகாரத்தையும், சட்டநிலைத் தகவையும் பெற்றுக்கொண்டனர். ராஜபக்ஷ ஆட்சிக்குழு போரின் இறுதிக் கட்டங்களிலான உயிரிழப்புகளையும், துன்பங்களையும், தொடர்ந்த துஷ்பிரயோகங்களையும் இடம்பெறவில்லையென்று மறுத்தது. மனிதஉரிமை மீறல்களும், ஜனநாயகச் செயற்பாட்டாளர்களை ஒடுக்குவதும், பாராளுமன்றம், நீதித்துறை அரசு மற்றும் அரசு அல்லாத ஊடகங்களின் செவ்வைபார்த்தல் மற்றும் சமநிலைப்படுத்தல்களின் குடைகவிழ்ப்பு நடவடிக்கைகளும் முறைமைப்படுத்தப்பட்டன. சர்வதேச

நுண்ணாய்வுகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதேவேளையில், உலக மூலதனத்தின், விசேடமாக சீனதேசத்திலிருந்து வரும் மூலதனத்தின் ஊடுருவல், அரசியல் ஆதரவைத் திரட்டியமைக்கும் வகையில் அரசுத் துறையின் விரிவாக்கத்தை அனுமதியளிக்கும் வகையிலான, தீவிர நவதாராளவாத அபிவிருத்திப் பேருபாயத்தைச் சேர்ந்த பாரிய அகநிலையமைவுக் கருத்திட்டங்களின் ஒரு பகுதியாகியது.

## 2. சிவில் சமூகச் சூழமைவு

1971 ஆம் ஆண்டில் மக்கள் விடுதலை முன்னணியின் அரசு விரோத எழுச்சி அரசினால் கொடூரமான முறையில் அடக்கியொடுக்கப்பட்டது. அது இலங்கையில் மனித உரிமைகளுக்கும், நீதிக்குமான ஒரு தீர்க்கமான தருணமாகும். சிவில் உரிமைகள் இயக்கம் போன்ற அமைப்புகள் அரசு வகைப்பொறுப்புக் கூறவேண்டுமென்று தெரிவித்தன. 1970 கள் இடதுசாரிகளின் சில பிரிவுகள் அதிகாரத்தைப் பகிர்ந்துகொண்டதுடன் ஆரம்பித்து, தொழிற்சங்கங்களை ஒடுக்குவதுடன் முடிவடைந்தன. ஏனைய சிவில் சமூகச்செயற்பாட்டாளர்கள் 1977 இல் பரிணமித்த எதேச்சாதிகார, நவதாராளவாத அரசுக்குச் சவால் விடுத்தனர். 1980 களில் ஆழமடைந்த இனத்துவ முரண்பாட்டுடன் இனங்களுக்கிடையிலான நீதி மற்றும் சமத்துவத்துக்கான அமைப்பு, மனிதஉரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு, ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம், அன்னையர் முன்னணி, மற்றும் ஏனையவை புதிய செயற்பாட்டாளர்களாகப் பரிணமித்தனர். இவர்கள் பெண்கள் உரிமைகள் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றை கண்காணிப்பதிலும், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் இடம்பெயர்வுகளோடு தொடர்புற்ற விவகாரங்களிலும் கவனஞ்செலுத்தினர். 1980 கள் மற்றும் 1990 களில் சர்வதேச மனிதஉரிமை அமைப்புகளுடனும், ஐக்கிய நாடுகள் பொறிமுறைகளுடனும் இணைந்து பணியாற்றியமை அரசின்மீது அதிகரித்த அழுத்தங்களைக் கொணர்ந்தது.

1977-1994 வரையிலான காலப்பகுதி சிவில் சமூகத்தின்மீதான சந்தேகம் மற்றும் அடக்குமுறை என்பவற்றையே பிரதிபலித்ததோடு, அதிகரித்த பதற்றநிலைகளுக்கும் இட்டுச்சென்றது. 1994-2005 காலப்பகுதியில், விசேடமாக 1990 களின் இரண்டாம் அரைப்பகுதியில் சமாதான முன்னெடுப்புகளும், சர்வதேச மத்தியஸ்தமும் அரசுக்கும் சிவில் சமூகத்துக்குமிடையிலான கூட்டுப்பணியையும், ஒத்துழைப்பையும் ஊக்குவித்தது. எவ்வாறாயினும், யுத்தம் படிப்படியாக அதிகரித்தமையும், 2006 இன் பின்னர் இராணுவமயப்படுத்தலும், சிவில் சமூகத்தின்மீதான தொடர் நுண்கவனக்கண்காணிப்புகள், சந்தேகம் மற்றும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டதோடு, விசேடமாக அரசை விமர்சித்த மனிதஉரிமை அமைப்புகள் மற்றும் ஊடகங்களையும் தீவிரமாகப் பாதித்தன.

2009 இல் யுத்தத்துக்கு முடிவு ஏற்பட்டதோடு, அரசு தனது அடக்குமுறையை விரிவுபடுத்தி, சகல வடிவங்களிலுமான உள்ளூர் மற்றும் சர்வதேச நுண்ணாய்வுச் செயற்பாடுகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தது. சிவில் சமூகத்தின் தீர்மானகரமான குரல்களும், குறிப்பாக மனிதஉரிமைச் செயற்பாட்டாளர்களும் இலக்குவைக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டு, காணாமற்போகச்செய்யப்பட்டனர். அல்லது கொல்லப்பட்டனர். கூடவே, சர்வதேச அசாநிகள் மற்றும் ஐ.நா. பொறிமுறைகள்மீது அரசின் சம்மதத்துடன் தார் பூசப்பட்டது. பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டபோதிலும், சிவில் சமூகச் செயற்பாடுகள், 2013 இல் பெண்கள் நடவடிக்கை வலையமைப்பினாலும், அனர்த்த முகாமைத்துவத்துக்கான பெண்கள் கூட்டமைப்பாலும் ஒழுங்குசெய்யப்பட்ட பாலியல்

வன்செயலுக்கு நீதி கேட்பதற்கான ஒரு பாரிய இயக்கம் உள்ளிட்ட வகையில் தொடர்ந்தன.

நாட்டிலுள்ள மனிதஉரிமை மற்றும் பெண்ணுரிமை அமைப்புகள் ஐ.நா. பொறிமுறையமைப்புகளுக்கும், சர்வதேச மனிதஉரிமை அமைப்புகளுக்கும் தகவல் வழங்கும்வகையில் மீறல்களை ஆவணப்படுத்துவதற்காக ஒன்றிணைந்து பணியாற்றின. பலியானோர்/ உயிர்பிழைத்தோருக்கான ஆதரவுகள், உளவியல் சமூக சேவைகள், வாழ்வாதார இடையீடுகள், பாதுகாப்பு மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களுக்கான புகலிடம், சௌக்கியம் மற்றும் ஏனைய தேவைகள் - வடிவத்தில் ஆரவாரமற்ற முறையில் வழங்கப்பட்டன. பாதிப்புற்றோர்/ உயிர்பிழைத்தோர் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீளிணக்க ஆணைக்குழு (2010), காணாமற்போனோர் குறித்த ஆணைக்குழு (2013) போன்ற புதிய அமைப்புகள் முன்னிலையில் சான்றுகளை வழங்குவதற்கு சிவில் சமூகம் உதவிசெய்தது.

சிவில் சமூகம் ராஜபக்ஷ ஆட்சிக்குழுவின் அரசியல் எதிரணிக்கும் ஆதரவு வழங்கியது. எதிர்க்கட்சித் தலைவரின் பெண்களுக்கும், யுவதிகளுக்குமெதிரான வன்செயல்கள் ஆணைக்குழுவில் பிரசித்திபெற்ற பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்களாக இடம்பெற்றிருந்த அதேவேளையில், சமூக நீதிக்கான இயக்கம் 2015 இல் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் விரும்பும் ஒரு பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்கும் வகையில் பரிணமித்தது. ராஜபக்ஷ தோல்விகண்டபின்னர், பாராளுமன்றத்தேர்தல்களில் எதிர்க்கட்சிகளின் கூட்டணி வெற்றிபெற்றது. இது சிவில் சமூகத்துக்கான வாய்ப்புவசதிகளை மேலும் அதிகரித்தது.

பாதுகாப்பு மற்றும் கவனக்கண்காணிப்பு ஏற்பாடுகள் பூரணமாக அகற்றப்படாதவேளையிலும், வெளிப்படையான அச்சுறுத்தல்கள் குறைவடைந்ததோடு, ஊடகங்கள் மேலும் சமநிலையான மனிதஉரிமைக் காட்சிநிலைகளை வழங்கின. அரசியலமைப்பு மன்றம், மனிதஉரிமைகள் ஆணைக்குழு, மீளிணக்கப் பொறிமுறைகள் குறித்த கலந்தாலோசனைச் செயலணி மற்றும் தகவலறியும் உரிமை ஆணைக்குழு போன்ற அமைப்புகளுக்கு சிவில் சமூக மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் நியமிக்கப்பட்டனர். அரசாங்க உத்தியோகத்தர்களையும், நிறுவனங்களையும் அணுகுதல் மேம்பாடுற்றதோடு, பல மனிதஉரிமைச் செயற்பாட்டாளர்களின் ஈடுபாட்டுடன் 2017-2020 காலப்பகுதிக்கான தேசிய மனித உரிமைகள் செயல்திட்டம் ஒன்றும் வரையப்பட்டது. அரசுடன் ஈடுபட்டுச்செயலாற்றும் விடயத்தில் சிவில் சமூகம் ஒரு விமர்சன ரீதியான, கோட்பாட்டுத் தொலைவில் நிற்கவேண்டிய சவாலை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. நிதியளிப்பும், குறுங்கால அரசியல் எதிர்பார்ப்புகளிலிருந்து பரந்துபட்ட, நீண்டகால, பின்னிப்பிணைந்த இயக்கங்களைக் கட்டியெழுப்பும் புதிய நிறுவன வடிவங்களுக்குமான தேவையும் இன்னமும் ஒரு சவாலாகவே காணப்படுகின்றன.

## 3. பாதிப்புற்றோரின் நிலைமை

யுத்தம் பல்வகைமைகொண்ட தீங்குகள், துயரங்கள் மற்றும் பலியாதல் கோரிக்கைகளைப் பிறப்பித்துள்ளமையால், “பலியானோரை” ஒரு குறுகிய வழியில் விபரிக்கும் இடர்வரவு இடைமாற்றக்கால நீதிக்கு ஒரு பாரிய கரிசனை விடயமாகவுள்ளது. இது பலியானோர் அரசியல் பாதிப்புற்ற குழுக்கள் மற்றும் வர்க்கங்களின் உரிமைக்கோரிக்கைகள், எதிர் உரிமைக் கோரிக்கைகள் என்பவற்றில் வெளிப்படையாகின்றது. உதாரணமாக - “பழைய” மற்றும் “புதிய”, யுத்தத்துக்குப் பின்னர் உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களை சர்வதேச மனிதாபிமானச் செயற்பாட்டாளர்களும், அரசும்

வகுப்பினப்படுத்துவது பிளவுகளுக்கும், ஒப்புரவற்ற தன்மைகளுக்கும் இட்டுச்சென்றுள்ளது. LTTE முன்னாள் போராளிகளின், விசேடமாகப் பெண்களின் நிலைமை அவர்களின் சொந்த ஜனசமூகங்களினுள்ளேயே சவால்நிறைந்ததாகவுள்ளதோடு, அரசும் அவர்களைச் சந்தேகத்துடனேயே நோக்குகின்றது. வடக்கிலுள்ள முஸ்லிம்களும், இந்திய வம்சாவளித் தமிழர்களும் அனுபவித்த துன்பதுயரங்கள் தொடர்ந்தும் ஏனையவற்றைவிடக் குறைந்த அளவிலான கவனத்தையே பெறுகின்றன.

வடக்கு, கிழக்கில் வறுமை மற்றும் உரிமைகள் மறுப்பினால் மிக மோசமாகப் பாதிப்புற்ற பிரதேசங்களில் பாதிப்புற்றோரின் தேவைகள் உடனடியாகவே பிரத்தியட்சமாகவுள்ளன. இலகுவில் பலியாகுந்தன்மை மற்றும் சமூகப்பாதுகாப்பில் திருப்தியற்ற நிலைகள் போன்ற பொதுவான சூழமைவில் பெண்கள் பன்முகச்சுமைகளைத் தாங்கிக்கொள்ளுகின்றனர். இராணுவ மற்றும் ஒட்டுப்படை ஆளணியினரின் விதவைகள் உள்ளிட்டவகையில், மாற்றுத்திறனாளிகளான நபர்கள் மிகவும் இலகுவில் பாதிப்புறக்கூடியவர்களாகவுள்ளனர். பாலியல் துன்புறுத்தல்களுக்கு ஆளாகுவோர் பாரதூரமான சமூக மற்றும் உளவியல் சவால்களுக்கு முகங்கொடுப்பதோடு, தந்தைவழி உளப்பாங்குகளால் மேலும் தீவிரமாகப் பாதிப்புற்று மேலதிக துஷ்பிரயோகங்களுக்கு இலகுவில் பலியாகின்றனர். சட்டரீதியான செயற்பாடுகளை முன்னெடுப்பதும், பாதிப்புகள் குறித்து, வெளிப்படையாக எடுத்துரைப்பதும் மேலதிக இடர்வரவுகளை ஏற்படுத்துகின்றன.

பலியானோர் எவ்வாறு நோக்கப்படுகின்றார் என்பது மேலும் விசனமூட்டும் ஒரு விடயமாகவுள்ளது தாம் அனுபவித்த உரிமைமீறல்கள் குறித்துப் பேசுவோர் பலியானோராக இனங்காணப்படும் 'சான்றுரை மேலோடு" களாக மாறிவிடும் அபாயமும் உள்ளது. பலியானோர் எவ்வாறு இயக்கங்களையும், பரப்புரை முன்னெடுப்புகளையும் வடிவமைத்து மேற்கொள்வது என்பது இன்னுமோர் இயைபுள்ள கேள்வியாகும். உதாரணமாக - பாலியல் வன்செயலுக்கான வகைப்பொறுப்பு சம்பந்தமான சர்வதேசப் பரப்புரை பொருளாதார, நீதி மற்றும் பெண்களினதும், அவர்களின் குடும்பங்களினதும் அன்றாட உயிர்வாழ்க்கைப் போராட்டங்களை முக்கியத்துவம் குறைந்தவையாக்கியுள்ளது.

## 4. கடந்தகால இடைமாற்றக்கால நீதி குறித்த முன்முயற்சிகள்

### 4.1 பலவந்தமாகக் காணாமற்போகச்செய்யப்பட-டோர் சம்பந்தமான விசாரணை ஆணைக் குழுக்கள் (1994-1998)

1990 ஆம் ஆண்டளவில் அரசு விரோத எழுச்சிகளும், அவற்றுக்கான எதிர்நடவடிக்கைகளும் ஆயிரக்கணக்கானோர் காணாமற்போவதற்கு இட்டுச்சென்றன. வடக்கு, கிழக்கில் 1994 இல் யுத்தம் வெடித்தமை காணாமற்போவோரின் ஒரு புதிய அலையை உருவாக்கியது. 1994 பொதுத் தேர்தலின்போது காணாமற்போனோரின் பிரச்சினை ஒரு பாரிய விவகாரமாகியது. எதிர்க்கட்சியாகிய ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியும், அதன் பங்காளர்களும் 17 வருடகால ஐக்கிய தேசியக் கட்சியின் எதேச்சாதிகார ஆட்சியையும், 1988 க்குப் பின்னரான அதன் ஒடுக்குமுறைகளையும் பரந்த சிவில் சமூக ஆதரவுடன் எதிர்த்துநின்றன. தெற்கிலும், மேற்கிலுமிருந்த அன்னையர் முன்னணி ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் வெற்றிக்குப் பாரிய பங்களிப்பை வழங்கியது. அதேவேளையில் அன்னையருக்கு நீதி வழங்குவதற்காகச் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வழங்கிய வாக்குறுதி அவர் 1994 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிகாண உதவியது.

ஜனாதிபதி குமாரதுங்க 1988-1994 காலப்பகுதியில் இடம்பெற்ற காணாமற்போதல் சம்பவங்கள் குறித்து

விசாரணை செய்வதற்காக மூன்று பிராந்தியங்களில் விசாரணைகளை ஆரம்பித்தார். இவை தன்விருப்பின்றி அகற்றப்பட்டோர் அல்லது காணாமற்போன நபர்கள்[1] குறித்து விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழுக்களென்று அழைக்கப்பட்டன. 1998 இல் ஏனைய பல விவகாரங்களுக்குத் தீர்வுகாணும் வகையிலான நாடளாவிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவும் அமைக்கப்பட்டது. 1997 இல் மூன்று பிராந்திய ஆணைக்குழுக்களினதும் அறிக்கைகள் ஜனாதிபதிக்குக் கையளிக்கப்பட்டன. அவை அதற்கு அடுத்த வருடத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டன. அதேவேளை, நாடளாவிய ஆணைக்குழுவின் அறிக்கை 2000 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டு, இரண்டு வருடங்களின் பின்னர் பகிரங்கப்படுத்தப்பட்டது.

மூன்று பிராந்திய துணைக்குழுக்கள் 27,000 க்கு மேற்பட்ட முறைப்பாடுகளை விசாரணை செய்தன. 15,000 பேருக்கு மேற்பட்டோர் காணாமற்போனதையும், உறுதிசெய்தன. அவை 10,136 மேலதிக முறைப்பாடுகளை நாடளாவிய ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தன. இந்த ஆணைக்குழு மேலும் 4,473 நபர்கள் காணாமற்போனமைக்கான சான்றுகளை நிலைநாட்டியது. நாடளாவிய ஆணைக்குழு தனது முறைக்குத் தனது பணிப்பாணைக்கு வெளியிலுள்ள 16,305 புதிய முறைப்பாடுகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தது. மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த விடயங்களை விசாரணைசெய்துவந்த நிலையில், 2006 இல் இச்செயல்முறை நிறுத்தப்பட்டது[2]. மூன்று ஆணைக்குழுக்களும் 1,681 காணாமல்போதல் விடயங்களில் சந்தேக நபர்களின் பெயர்களைத் தெரிவித்ததோடு, “பொறுப்புக் கூறவேண்டிய பல நூற்றுக்கணக்கானோரையும்” இனங்கண்டன. இந்த அமைப்புகளின் விதந்துரைப்புகளைத் தொடர்ந்து, பொலிஸ் திணைக்களத்தில் ஒரு காணாமற்போனோர் விசாரணை அலகு தாபிக்கப்பட்டு, இந்த விடயங்களை விசாரணைசெய்து, குற்றப்பகிர்வு மேற்கொள்வதற்காகச் சட்டமா அதிபரின் காணாமற்போன நபர்கள் அலகுக்கு இடமாற்றம் செய்யப்பட்டன. எவ்வாறாயினும், ஒருசில பாதுகாப்புப்படை அங்கத்தினர்களே வழக்கு விசாரணைகளுக்குச் சென்றதோடு, விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில கீழ்மட்ட ஆளணியினரே குற்றத்தீர்ப்பைப் பெற்றனர்[3].

ஏனைய விதப்புரைகள் காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு இழப்பீடுகள் மற்றும் மரணச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு இட்டுச் சென்றன. 1995-1999 காலப்பகுதியில் 15,000 மரணச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, பலியான 16,000 பேரின் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடுகளும் வழங்கப்பட்டன[4].

இந்த ஆணைக்குழுக்கள் தண்டனைப்பயமில்லாத செயற்பாடுகள் குறித்து எதையும் சாதிக்கவில்லையெனினும், அரசுக்குக் குற்றச்செயல்கள் இடம்பெற்றதென்பதை அங்கீகரிப்பது முக்கியமானதாகவிருந்தது. தேர்தல் அரசியலில் அன்னையர் முன்னணி பிரவேசித்தமை அதன் தோற்றப்பாட்டையும், அரசியல் செல்வாக்கையும் விரிவுபடுத்தியது. முன்னணியில் துடிப்பாகச் செயற்பட்ட இரு அரசியல்வாதிகள் காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு நீதிக்கான இலட்சியத்தைக் கைவிட்டபோது, அது பலவீனமடைந்தது. தாம் அதிகாரத்துக்குக் கொண்டுவர உதவிய அரசாங்கத்தின் செயலின்மை எதிரில் அன்னையர் முன்னணி இயக்கமும், ஏனைய சிவில் செயற்பாட்டாளர்களும் ஆணைக்குழுக்களின் விதப்புரைகள் குறித்த நடவடிக்கையை

1 The three commissions were responsible for the Central, North Western, North Central and Uva Provinces; Northern and Eastern Provinces; and Western, Southern, and Sabaragamuwa Provinces, respectively.

2 *Human Rights Watch*, “Recurring Nightmare: State Responsibility for ‘Disappearances’ and Abductions in Sri Lanka,” Volume 20, No. 2(C), March 2008, at HRW https://www.hrw.org/ reports/ 2008/srilanka0308/2.htm.

3 Ibid.

4 Ibid.

உறுதிசெய்ய முடியவில்லை. அரசாங்கத்துடனும், அதன் செயல்முறைகளுடனும் பணியாற்றிய பல செயற்பாட்டாளர்கள் பிரிவுக்கோடுகள் மங்கிய நிலையில் இந்த அமைப்புகளும், இயக்கங்களும் ஏனைய அரசியல் நிகழ்ச்சி நிரல்களால் உள்ளீர்க்கப்பட்டன.

## 4.2 கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (2010)

மே 2010 இல் யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் இடம்பெற்ற குற்றங்களை ராஜபக்ஷ ஆட்சிக்குழு ஏற்றுக்கொள்ளமறுத்ததால் ஏற்பட்ட தீவிர சர்வதேச அழுத்தங்களின்கீழ், அது ஒரு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை (LLRC) நிறுவியது. டுடுசுஊ யின் மட்டுப்பாடற்ற பணிப்பாணை 2002 க்குப் பின்னர் இடம்பெற்ற குற்றங்களை மாத்திரமே விசாரணை செய்யவிருந்தது. மிகவும் பாரதுாரமான சாட்டுதல்களை அது உள்ளடக்கியிருக்கவில்லை. அரசாங்கத்துடன் உறவு கொண்டிருந்த ஆணையாளர்கள் சுயாதீனமான, பக்கச்சார்பற்ற விசாரணையை உறுதிப்படுத்தும் அம்சங்கள் இல்லாமை, சாட்சிகள் மற்றும் பாதிப்புற்றோருக்கான பாதுகாப்புச்சட்டமின்மை மற்றும் போதாத விசாரணைக்காலம் என்பவை காரணமாக ஆணையாளர்களின் நம்புதகவின்மை போன்ற காரணங்களின் நிமித்தம் பல இலங்கையர்களும், சர்வதேசச் செயற்பாட்டாளர்களும் ஆணைக்குழுவின் முன்னிலையில் தோற்றுவதற்கு மறுப்புத் தெரிவித்ததனால் சிவில் சமூகத்தின் மத்தியில் தீவிர, நம்பிக்கையீனம் மற்றும் அரசியல் ரீதியான எதிர்ப்பு நிலவியபோதிலும், பாதிப்புற்ற பலர் LLRC செயல்முறையுடன் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். இவர்களுட் சிலர் உள்ளூர் மனிதஉரிமை மற்றும் பெண்ணுரிமை அமைப்புகளின் ஆதரவுடன் அவ்வாறு செயற்பட்டனர். 11 மாத காலத்துக்குமேலாக LLRC 57 பகிரங்க அமர்வுகளை நடத்தியதோடு, 40 இட அமைவுகளுக்கும் விஜயங்களை மேற்கொண்டது. ஆயிரத்துக்கு மேற்பட்டோர் LLRC முன் தோன்றிச் சான்றளித்தனர். ஆணைக்குழுவுக்கு 5,000 க்கு மேற்பட்ட எழுத்துமூலச் சமர்ப்பணங்களும் கிடைத்தன..

செத்தெம்பர் 2010 இல் டுடுசுஊ ஜனாதிபதிக்கு ஓர் இடைக்கால அறிக்கையைக் கையளித்தது. வரைவுள்ள காலச்சார்புநிலை விசாரணைப் பணிப்பாணை, ஆக்கவமைவு மற்றும் ஏனைய குறைபாடுகள் இருந்தபோதிலும், இறுதி அறிக்கையில் மோதல் முரண்பாட்டுக்கான மூலகாரணங்களின் பகுப்பாய்வு நிறுவனங்களை அரசியலிலிருந்து விடுவித்து, இராணுவமயப்படுத்தலின்மை, பேச்சுச் சுதந்திரம், காணி விவகாரங்கள், மொழியுரிமைகள், மீளிணக்கம் மற்றும் காணாமற்போன நபர்கள் குறித்த நிகழ்வுகளை விசாரணைசெய்து வழக்குத் தொடருதல், குடிமக்கள் மரணங்கள் மற்றும் ஏனைய குற்றச்சாட்டுதல்கள் குறித்த விதப்புரைகள் போன்றவை கணிசமான அளவிலான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தன. அது விசாரணை செய்யப்பட வேண்டிய, அரசாங்கத்துடன் தொடர்புற்ற ஆட்களினதும், அமைப்புகளினதும் பெயர்களைத் தெரிவித்ததோடு, LTTE அமைப்பினால் வட மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் மற்றும் இந்திய வம்சாவளித் தமிழ்மக்கள் குறித்த முக்கியமான விதப்புரைகளையும் உள்ளடக்கியிருந்தது. நடைமுறையாக்கம்,காலதாமதம், அரை மனதுடன்கூடிய செயற்பாடுகள் மற்றும் தெரிந்தெடுத்த ஒருசில விடயங்கள் சம்பந்தமுற்றவையாக இருந்தபோதிலும், விதப்புரைகள் உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பரப்புரைகளுடன் ஏற்புடையவையாகவும், பயன்பட்டதால், ஐ.நா அரங்குகளில் அரசாங்கத்தின்மீதான அதிகரித்த அழுத்தங்களுக்கு இட்டுச்சென்றன. மிகக்குறைவான எதிர்பார்ப்புகளே இருந்தபோதிலும், பல பாதிப்புற்றோர் / உயிர்பிழைத்தோர் LLRC ஐ கரிசனை விடயங்கள் குறித்துக் குரல் எழுப்பவும், பகிரங்க அறிக்கைகளைப்

பிறப்பாக்கம்செய்வதற்குமான ஒரு வாய்ப்பாகவே நோக்கினர்[5].

### 4.3 மீளிணக்கப்பொறிமுறைகள் குறித்த கலந்தாலோசனைச் செயலணி (ஊவுகுசுஆஇ 2016)

2015 இலங்கை அரசாங்கத்தினால் இணை அனுசரணை வழங்கப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் மன்றத் தீர்மானம் அ) உண்மை, நீதி, மீளிணக்கம் மற்றும் குற்றங்கள் மீண்டும் இடம்பெறாமை ஆ) காணாமற்போனோர் அலுவலகம், ஈடுசெய்தல் மற்றும் இ) விசேட சட்டவுரைஞர்களைக் கொண்ட ஒரு நீதித்துறைப் பொறிமுறை என்பவற்றைக்கோரியது. மீளிணக்கப் பொறிமுறைகள் சம்பந்தமான கலந்தாலோசனைச் செயலணி இப்பொறிமுறைகளின் வடிவமைப்பைத் தீர்மானிக்கும் வகையிலான பகிரங்கக் கலந்தாலோசனைகளுக்காக 2016 ஜனவரியில் ஏற்படுத்தப்பட்டது. இந்த அமைப்பு மனிதஉரிமைகள், கல்விப்புலமை, சட்டம், பொதுச் சுகாதாரம் மற்றும் ஊடகங்கள் போன்ற துறைகளைச்சேர்ந்த 11 சுயாதீன மற்றும் நம்புதகவுள்ள நபர்களால் ஆக்கப்பட்டிருந்தது. ஆறு அங்கத்தவர்கள் பெண்களாகவிருந்தனர். இதில் சகல பிரதான இனத்துவ ஜனசமூகங்களும் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன.

CTFRM உள்ளூர்த் தலைவர்கள், அரைவாசி பெண்களைக்கொண்ட, பாதிப்புற்றோர / உயிர்பிழைத்தோர் பிரதிநிதிகளுடன் மாவட்ட மற்றும் மாகாணக் கலந்தாலோசனை அமைப்புகளை ஏற்படுத்தியது. நூற்றுக்கணக்கான கலந்தாலோசனை அரங்குகள், நகர மண்டபக் கூட்டங்கள், கவனக்குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் துறை / தொனிப்பொருள் கலந்துரையாடல்களில் 7306 சமர்ப்பணங்களைப் பிறப்பாக்கம்செய்யும்வகையில் சிவில் சமூகக் குழுக்களும், பெண்களின் அமைப்புகளும் துடிப்பான பாத்திரத்தை வகித்திருந்தன. 2017 ஜனவரியில் சமர்ப்பிக்கப்பட்ட இறுதியறிக்கை பரந்தவீச்சிலான நான்கு பொறிமுறைகள் மற்றும் ஏனைய இடைமாற்றக் கால நீதி குறித்த விவகாரங்கள் சம்பந்தமான விதப்புரைகளைக்கொண்டுள்ளது. எவ்வாறாயினும், வெளிநாட்டு நீதிபதிகளைக்கொண்ட ஒரு விசேட நீதிமன்றம் உருவாக்கப்படவேண்டுமென்ற அதன் விதப்புரை அதிகரித்த அரசியல் அவதானத்தையும், கருத்து வேறுபாடுகளையும் உருவாக்கியுள்ளது.

## 5. சிவில் சமூகம் வழிநடத்தும் இடைமாற்றக்கால நீதிச் செயல்முறை

சிவில் சமூகத்தினால் இடைமாற்றக்கால நீதி எதுவும் வழிநடத்தப்படாத அதேவேளையில், பல சர்வதேச, தேசிய மற்றும் உள்ளூர் பிரயத்தனங்கள் உண்மை, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை முன்னேற்றும் நோக்கத்தைக்கொண்டுள்ளன.

### 5.2 சர்வதேசப் பெண்ணிலைவாதிகளின் உண்மைதேடல் முயற்சி (2002)

2002 இல் அரசாங்கத்துக்கும், LTTE அமைப்புக்குமிடையிலான போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர், இலங்கைக் கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டதால், சமாதானத்துக்கான புதிய நம்பிக்கைகள் ஏற்பட்டன. சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பெண்கள் பங்கேற்காமையால் பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு மற்றும் சர்வதேச இனத்துவக் கற்கைகளுக்கான நிலையம் பெண்களின் பங்கேற்பை வலியுறுத்தும் வகையில் பிராந்திய மற்றும் சர்வதேசப் பெண்ணிலைவாதிகளும், மனிதஉரிமைச் செயற்பாட்டாளர்களும், சர்வதேசப்

5 Centre for Policy Alternatives, "Release of the Lessons Learnt and Reconciliation Commission (LLRC) Report," 3 January, 2012, at http://www.cpalanka.org/release-of-the-lessons-learnt-and-reconciliation-commission-llrc-report/

பணியைப் பொறுப்பேற்கவேண்டுமென்று அழைப்புவிடுத்தன[6].

சர்வதேசப் பணிக்குழுவைச் சந்தித்த பெண்களின் அமைப்புகளும், ஜனசமூகக் குழுக்களும் இடம்பெயர்ந்த பெண்கள் மற்றும் வறிய பெண்களின் தேவைகள் குறித்தும், வன்செயல்களுக்கு இலகுவில் பலியாகக்கூடிய பெண்களின் நிலை குறித்தும் எடுத்துரைத்தன. வெளிநாட்டுத் தூதுவராலயங்களுக்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இது பெண்களின் கரிசனை விடயங்களுக்கான பரப்புரை, சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பெண்களின் சமாதானப் பணிகளுக்கான அங்கீகாரம் மற்றும் ஒரு **விதிமுறையான பொறிமுறை உருவாக்க முயற்சிகளுக்குப்** பயன்படுத்தப்பட்டது. 2002 இல் பேச்சுவார்த்தைகளுள் பால்நிலை விவகாரங்கள் சம்பந்தமான உப குழு ஏற்படுத்தப்பட்டது. யுத்தம் மீண்டும் ஆரம்பிக்குமுன்னராக இது இரு தடவைகள் கூடியிருந்தது[7].

6 இந்த அணியில் சர்வதேச மன்னிப்புச் சபையைச் சேர்ந்த (ருமு) கலாநிதி எலிசபெத் நிசான், சாந்தி தைரியம் (மலேசியா), புளோரன்ஸ் ஒடுவோர் (உகண்டா), லிஸா கோவிஸ் (ருளுயு) மற்றும் சோமா ஜப்பார் (இந்தியா) என்போர் அடங்கியிருந்தனர். அன்பேரியா ஹனீபா, குமுதினி சாமுவேல், டல்சி டி சில்வா, சரோஜா சிவச்சந்திரன், சுல்பிகா இஸ்மாயில், யமுனா இப்ராஹிம், கமலினி கதிர்வேலாயுதபிள்ளை, விஜி முருகையா மற்றும் அமரா ஹப்புஆரச்சி. சந்தனீ ஹேரத், அன்னி கூரியன், சுமங்கலி அளுத்கம, ஷர்மா ரணவன, மற்றும் சித்திரலேகா மௌனகுரு ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். சாந்தி தம்பையா மற்றும் பிரியா தங்கராஜா ஆகியோர் மொழிபெயர்ப்பாளர்களாகப் பணியாற்றினர்

7 அடுத்த வருடம் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கமும், டுவுவுநு அமைப்பும் தமது பிரதிநிதிகளை முன்மொழிந்தனர். டுவுவுநு அமைப்பு தமது பெண்கள் பிரிவின் தலைவியாகிய தமிழினி சுப்பிரமணியம் மற்றும் காயா சோமசுந்தரம், பிரெமிளா சோமசுந்தரம், சுதாமதி சண்முகராஜா, மற்றும் யாழினி பாலசிங்கம் ஆகியோரை முன்மொழிந்தது. பத்மினி சிதம்பரநாதன் டுவுவுநு தூதுக்குழுவுக்கு மதியுரையாளராகச் செயற்பட்டார்.

## 5.2 டுவுவுநு அமைப்பினால் வட மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் குறித்த பிரஜைகள் ஆணைக்குழு (2010)

1990 அக்டோபரில் LTTE அமைப்பு முஸ்லிம்கள் வட மாகாணத்திலிருந்து ஒருசில மணித்தியாலங்களினுள் வெளியேறிவிடவேண்டுமென்று கட்டளைபிறப்பித்தது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் வவுனியாவின் சில பகுதிகளிலிருந்த 75,000 க்கு அண்மித்த முஸ்லிம்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டதோடு, அவர்களுக்குச் சொந்தமான பெருமளவு பொருட்களை எடுத்துச் செல்லக்கூடாதென்றும் தடைவிதித்தனர். எவ்வாறாயினும், இந்த வெளியேற்றம் யுத்தம் குறித்த அனேகமான கதைகளில் ஓர் ஏளனநிலையிலேயே பேசப்பட்டது. இதற்குப் பதில் நடவடிக்கையாக சட்டம் மற்றும் சமூக நம்பிக்கைப்பொறுப்பு அமைப்பு, கிராம அபிவிருத்தி மன்றம், மக்கள் செயலகம், ஜனசமூக நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் மற்றும் பிரபல முஸ்லிம்களின் மதியுரைக் குழு என்பவற்றுடன் இணைந்து பணியாற்றுவதன்மூலம் உண்மைதேடும் முன்முயற்சியொன்றை மேற்கொண்டது.

இடைமாற்றக்கால நீதிக்கான சர்வதேச நிலையத்துடன்

அரசாங்க முன்மொழிவுகளில் டாக்டர் குமாரி ஜயவர்த்தன, டாக்டர் தீபிகா உடகம, டாக்டர் பசீலா எம் ரியாஸ், குமுதினி சாமுவேல், பைஸூன் சக்கரியா, என்போர் இடம்பெற்றிருந்தனர். டாக்டர் அஸ்ட்ரிட் ஹெய்பேர்க் ளுஊபுஜ ஏற்பாட்டாளராகப் பணியாற்றினார். குமுதினி சாமுவேலின் "தன்னாட்சியின் முக்கியத்துவம்: பெண்களும், இலங்கைச் சமாதானப் பேச்சுவார்த்தைகளும்" என்னும் ஆக்கத்தைப் பார்க்கவும். ௱ஜஜேமூே நவம்பர் 2010, மனிதாபிமான உரையாடல் நிலையம் https://www.files.ethz.ch/isn/124926/2010_11_The%20importance%20of%20autonomy%20-%20Women%20and%20the%20Sri%20Lankan%20 Peace%20Negotiations.pdf. See also "First meeting of the sub-committee on gender issues (SGI) held in Kilinochchi",

நெருக்கமாகப் பணியாற்றி, வேறு உண்மைதேடும் அனுபவங்களிலிருந்தும் பயன்பெற்று, உயர்ந்த மட்டத்திலான ஜனசமூக ஈடுபாட்டை உறுதிசெய்து, வெளியேற்றப்பட்ட ஜனசமூகங்களின் அனுபவங்கள் மற்றும் கண்ணோட்டங்களைத் திரட்டி, பதிவுசெய்து, தொகுக்கும் காத்திரமான முயற்சிகள் இடம்பெற்றன. அனுபவங்களை ஆவணப்படுத்துவதில் பயிற்சிபெற்ற ஜனசமூக ஆராய்ச்சியாளர்கள் நூற்றுக்கணக்கான நேர்முகங்களை நடத்தயிருந்த அதேவேளையில், ஆணைக்குழு வட மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் மத்தியில் விசாரணை அமர்வுகளையும் நடாத்தியது.

இரண்டு வருடகாலமாக பிரஜைகள் ஆணைக்குழு முஸ்லிம்களின் வெளியேற்றதையும், அதன் விளைவுகளையும் ஆவணப்படுத்தியது. அது கீர்த்திமிக்க சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஆவணத்தைத் தயார்செய்தது. இந்த அறிக்கை வெளியேற்றப்பட்டமை அனுபவம், இரு தசாப்தகால இடம்பெயர்வு மற்றும் மீள்குடியேற்றம் என்பவற்றில் கவனம் செலுத்தியதோடு, அரசாங்கத்துக்கும், சர்வதேச சமூகத்துக்குமான விதப்புரைகளையும் கொண்டிருந்தது. இது வட மாகாண முஸ்லிம்களின் கண்ணோட்டங்களையும், அனுபவங்களையும் தமது சொந்தக் குரல்களில் பதிவுசெய்ய உதவியது. இது மன அதிர்ச்சி, சொத்துக்கள் பறிமுதல், ஓரங்கட்டல் சம்பந்தமான மௌனிக்கப்பட்ட அனுபவங்களுக்கு மேலும் பகிரங்க சட்டநிலைத் தகவை வழங்கி, பரப்புரைகளுக்கான காத்திரமான ஒரு மேடையைத் தாபித்தது.

## 5.3 தமிழ்-முஸ்லிம்-சிங்கள சகோதரியர் குழு: பாரிய முக்கியத்துவங்கொண்ட ஓர் உள்நாட்டு முன்முயற்சி

கிழக்கு மாகாணத்தில் இலங்கை தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள இனத்துவக் குழுக்களின் ஒரு கலவையாகும். இனத்துவத்தன்மைகொண்ட 30 வருடகால மோதலும், யுத்தமும் மரியாதையையும் நம்பிக்கையையும் ஆழமாகச் சிதைத்து, பாகுபாடு மற்றும் வெறுப்பை ஆழமாக விதைத்துள்ளன. இனத்துவ எல்லைகளினூடாக ஒருமைப்பாட்டையும், சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்புவது மற்றும் அன்பு, பகிரப்படும் அனுபவம் மற்றும் போராட்டங்களினூடாகச் சமூக இழைமானத்தை மீண்டும் ஏற்படுத்துவது சூரியாவின் பிரயத்தனங்களுக்கு நடுநாயகமான முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். இனத்துவ எல்லைகளினூடாக ஒருமைப்பாட்டையும், சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்புவது மற்றும் அன்பு, பகிரப்படும் அனுபவம் மற்றும் போராட்டங்களினூடாகச் சமூக இழைமானத்தை மீண்டும் ஏற்படுத்துவது சூரியாவின் பிரயத்தனங்களுக்கு நடுநாயகமான முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.

சூரியா அமைப்பு 1991 இல் கொழும்பில் இனத்துவரீதியாகப் பிரிவுற்ற. உள்நாட்டில் இடம்பெயர்ந்த நபர்களின் முகாம்களில் பெண்களுடன் பணியாற்றும் ஒரு சிறிய பெண்கள் கூட்டமைப்பாக உருவெடுத்தது. சூரியா அமைப்பு வட மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் பெண்களையும், கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த தமிழ்ப் பெண்களையும் ஒன்றிணைத்து, பகைமை, சந்தேகம் மற்றும் வன்செயல் நிறைந்த சூழலில் புதிய திறன்களைக் கற்றுக்கொள்வதற்கும், ஒருவரோடொருவர் உறவாடுவதற்கும் உதவியது. நம்பிக்கையீனம், பாகுபாடு மற்றும் அட்டூழியச் செயல்கள் அவர்களைச் சுற்றிக் காட்சியளித்தவேளையிலும், முஸ்லிம் மற்றும் தமிழ்ப்பெண்கள் மெதுவாகத் தமது அனுபவங்களை மனந்திறந்து கூறத்தொடங்கினர். அவர்கள் யதார்த்தநிலை மற்றும் பீதிகள் குறித்து ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொண்டனர். அது தூரங்கள் மற்றும் வேதனைகளை ஏற்றுக்கொண்ட போதிலும், ஒருமைப்பாடு மற்றும் புரிந்துணர்வின்

பிணைப்புகளைக் கட்டியெழுப்புவதில் முதல்படியாக விளங்கியது.

சூரியா அமைப்பு பகிரப்படும் கலாசார நடைமுறைகளும், இனத்துவ, மத ஜனசமூகங்களைப் பிணைக்கும் பரஸ்பர தங்கிநிற்றலும் எவ்வாறு பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்பும் ஓர் அரங்காக விளங்கும் என்பதை ஆய்வுசெய்தது. உதாரணமாக - பூநாச்சிமுனை பெண்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மரக்கறி விற்பவர்கள், மற்றும் சங்கத்தினால் சந்தைப்படுத்தப்படும் பாய்களை வாங்கிய தமிழர்களைப் பாதுகாப்பது உள்ளிட்டவகையில் வகுப்புவாத வன்செயல்களுக்கு எதிர்வினை காண்பித்தனர்.

மேலும், சமீபத்தில் சூரியா அமைப்பு யுத்தத்துக்குப்பின்னர் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வுகளில் தீவிர அதிகரிப்புக்குறித்துச் சிந்திக்கும்வகையில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களப் பெண்களை ஐக்கியப்படுத்தினர். பெண்கள் அளுத்கம மற்றும் பேருவளை போன்ற இடங்களில் சமீபத்தில் ஏற்பட்ட வன்செயல்களில் பாதிப்புற்ற தமது சகோதரிகளுக்குக் கடிதங்களை எழுதி வேதனை மற்றும் ஆதங்கங்களைப் பகிர்ந்துகொண்டு அவர்களுக்குத் தைரியமூட்டினர். தமிழ், முஸ்லிம், சிங்களச் சகோதரிமார் குழுக்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலும், அதற்கப்பாலுமுள்ள கிராமங்களில் தொடர்ந்தும் கூடி, உள்ளூர் வன்செயல்கள், வகுப்புவாத மற்றும் இனத்துவப் பதற்றநிலைகள் குறித்துப் பேசுகின்றனர். சென்றவருடம் இக்குழு 1990 இல் கிழக்கில் இடம்பெற்ற படுகொலைகளில் பலியானவர்களை நினைவுகூர்ந்தது. சமீபத்தில் இது மத அடிப்படையிலான அந்தஸ்து மற்றும் குடும்பச் சட்டங்களில் மறுசீரமைப்புகள், அரசியலமைப்புச் சீர்திருத்தம் மற்றும் ஏனைய விவகாரங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கான ஓர் அரங்காக மாறியுள்ளது.

கலந்துரையாடல்களும், உரையாடல்களும் பெண்களாகிய நாம் ஒருவர் மற்றவரின் அடையாளங்களின் பெறுமதியையும், சுமைகளையும் புரிந்துகொள்வதை அபிவிருத்தி செய்யும்வகையில் இணைவுநெருக்கமான, நம்பிக்கையான வாய்ப்புவசதிகளைக் காண உதவியுள்ளன. இச்செயல்முறை எழக்கூடிய பல சவால்களைக் காண்பதற்கும், மற்றும் இத்தகைய வாய்ப்புநிலைமைகள் மலரக்கூடிய நிபந்தனைகளை அறிந்துகொள்வதற்கும் உதவியுள்ளது. இத்தகைய உயிர்த்துடிப்பான, அரசுக்கோ, அ. சா.நிகளுக்கோ கிட்டாத நுண் வாய்ப்பு, வசதிகள் பெண்களுக்கே சொந்தமானவையும்,உண்மையைச் சொல்வதற்கும், உண்மையைத் தேடுவதற்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

## 6. இலங்கைச் சூழமைவிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள்

1. வாழ்க்கை அனுபவங்களுக்குத் தீர்வுகாணாது மனித உரிமைகள் மன்றத் தீர்மானம் முன்மொழிந்த பொறிமுறைகளில் தங்கிநிற்பதைவிட, இடைமாற்றுக்கால நீதிக்கான அடியிலிருந்து மேல்நோக்கிச்செல்லும் அணுகுமுறைகளைக் கட்டியெழுப்புவது சிறப்பானதாகும். இப்பிரச்சினை பெண்களுக்கெதிரான குற்றங்களுக்கு நியாயம் தேடுகையில் விசேடமாகக் கூர்மையானவையாகும். இக்குற்றங்கள் அனேகமான சந்தர்ப்பங்களில் வாழ்க்கை யதார்த்தத்தில் இனப்பிரிவுகளுக்கிடையில் ஊடறுத்துச் செல்பவையும், சட்டத்தில் வேண்டாதபோது பேசத் தகாதவையும், தொடர்புற்றவையாகவும் நோக்கப்படுபவையாகும்.
2. பெண்களின் பங்கேற்பும், தலைமைத்துவமும், உள்ளூரில் ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் ஈடுபாடும் உணர்வுபூர்வமான விடயங்களை எடுத்துக்காண்பிப்பதற்கும், சமாதானப் பணியில் பெண்களின் பாத்திரத்தையும், தலைமைத்துவத்தையும் அங்கீகரிப்பதற்கும், ஒரு

பால்நிலைக் கண்ணோட்டத்திலிருந்து பிரதான பிரிவாக இடைமாற்றக்கால எண்ணக் கருக்களுக்குச் சவால் விடுப்பதற்கும் தீர்மானகரமானவையாகும்.

3. அரசினால் வழிநடாத்தப்படும் இடைமாற்றக்கால நீதிச் செயல்முறைகளைப் பாதிப்புற்ற ஜனசமூகங்கள் எவ்வாறு நோக்குகின்றனர் என்பதுகுறித்துச் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். பல சிவில் சமூகக் குழுக்கள் டுடுசுஊ ஐயும், காணாமற்போனோர் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவையும் பகிஷ்கரித்து, விமர்ச்சித்தவேளையில் மக்கள் அவற்றில் பங்கேற்று, தம்மை அவற்றுடன் ஈடுபடுத்திக் கொண்டனர். உண்மையில் இப்பங்கேற்புக்காரணமாக இந்த அமைப்புகள் தமது மட்டெல்லைகளுக்கு அப்பாற்செல்லவும் நிர்ப்பந்திக்கப்பட்டன.

4. ஊவுகுசுஆ செயல்முறைகளில் ஓர் உள்ளார்ந்த கருவிசார் பெறுமானத்தைக் காண்பித்தது. உண்மையான பங்கேற்பு, சட்டநிலைத்தகவைக் கட்டியெழுப்பி, நம்பிக்கையை இது மேம்படுத்தி, அர்த்தமுள்ள பணிவிளைவைச் சாத்தியமாக்குவதற்கு மட்டுமன்றி, மக்கள் போராட்டங்களுக்கும், அனுபவங்களுக்கும் அதிகார வலுவளித்து, கண்ணியப்படுத்துவதற்கும், இவ்வாறாக அவற்றை நிலைபேறாக்குவதற்கும் சிறப்பானதாகும். அத்தோடு, அதியுயர் மட்டத்தில் பாதிப்பற்றோர் ∴ உயிர்பிழைத்தோரின் பிரதிநிதித்துவம் இடைமாற்றக்கால நீதிப் பிரயத்தனங்களுக்குச் சட்டநிலைத் தகவையும், நம்புத்தகவையும் வழங்குவதற்குத் சிறப்பானதாகும.

5. அரசினதும், அதன் நிறுவனங்களினதும் ஆழமான நிலைபேறான நிலைமாற்ற இடைமாற்றக்கால நீதிச் செயற்பாடுகள் அரசியல் சாசன மற்றும் நீதித்துறை மறுசீரமைப்புகளுடன் இணைப்புறுவதை அவசியப்படுத்துகின்றன. புறநடையான விடயங்களில் கவனஞ்செலுத்துவது மாத்திரம் அரசு-பிரஜைகள் உறவைக் கணிசமான அளவுக்கு மாற்றிவிட முடியாது.

6. ஆணைக்குழுக்களும், ஏனைய அரசு இடைமாற்றக்கால நீதிப்பொறிமுறைகளும், சிவில் சமூகத்தின் விதப்புரைகள் நிலைபேறான வழிகளில் நடைமுறைக்கிடப்படுவதை உறுதிசெய்யும் வகையில் சிவில் சமூக அணிதிரட்டலுக்கும், ஈடுபாட்டுக்கும் ஓர் ஊக்கியாகச் செயற்படுதல் வேண்டும். மூலவளங்கள் சுயாதீனமான, காத்திரமான விசாரணைகளுக்கும், பயனுறுதியுள்ள வழக்குத்தொடரல்களுக்கும் அர்ப்பணிக்கப்படுதல் வேண்டும்.

7. பன்முக அரச மற்றும் அரசு அல்லாத செயற்பாட்டாளர்களே மீறல்களுக்குப் பொறுப்பானவர்களாவர். அரசு கவனம் செலுத்தும் செயல்முறைகளும், பொறிமுறைகளும் மாத்திரம் உண்மையையும், வகைப்பொறுப்பையும் கொண்டுவந்துவிடமாட்டாது. ஜனசமூகம் வழிநடத்தும் செயல்முறைகள் அல்லது பாதுகாப்பான, நம்புதகவுள்ள, பாதிப்புற்றோரை நடுநாயகமாகக்கொண்ட வாய்ப்பு ஏற்பாடுகள் தீர்மானகரமானவையாகும்.

8. இறுதியாக, உண்மை தேடல் மற்றும் உண்மையைக் கூறுதலின் சவாலான தன்மை மனதிற்கொள்ளப்படுதல் வேண்டும். சகல உண்மைகளையும் அரசு தன்வசம் கொண்டிருக்கவில்லை. இடைமாற்றக்கால நீதிச் செயல்முறைகள் உணர்வுபூர்வமாக இட அமைவு பெறுதல் வேண்டும். இதன்மூலம் உள்ளூர் நுண் வாய்ப்பு வசதிகள் பரிணமித்து, உண்மை மற்றும் நல்லிணக்கச் செயல்முறையை அடியிலிருந்து மேல்நோக்கிச் கட்டியெழுப்புதல் சாத்தியப்படும்.

**7. எதிர்காலச் சவால்கள்**

இடைமாற்றக்கால நீதி குறித்த பரந்த வினா பெரும்பான்மைச் சிங்களத்தேசியவாதத்துடன் பிணைப்புற்றுள்ளது. எது எவ்வாறாயினும், நீதி, நல்லிணக்கம் மற்றும் வகைப்பொறுப்பு குறித்த பிரயத்தனங்கள் முழுக்க முழுக்க இலங்கை அரசியல் சமூகத்தின் ஓர் ஆழமான நிலைமாற்றத்தில் தங்கியிருக்கும் விடயங்கள் அல்ல. அரசுமீதான ஒருமுகப்பட்ட பிரயத்தனம் மற்றும் அழுத்தத்தினூடாகக் குறித்துரைப்பான விடயங்களில் உண்மை மற்றும் வகைப்பொறுப்பை ஈட்டிக்கொள்வது சாத்தியமும், ஓரளவுக்கு நிரூபிக்கப்பட்டதுமான விடயமாகும். உண்மையையும், வகைப்பொறுப்பையும் மேலும் பூரணமாக ஈட்டிக்கொள்ளுதல், போராட்டத்தை நிலைபேறாக்கும் சிறிய, ஆயினும் முக்கியமான வெற்றிகளை மைல்கற்களாகக்கொண்ட ஒரு நீண்டகாலக் கருத்திட்டமாவது அமைவது சாத்தியமாகும். இத்தகைய ஒரு நீண்டகாலச் செயல்முறைக்கான அடித்தளத்தை இடும் அரசியல் வாய்ப்பு உள்ளது. அரசியல் வாய்ப்பு வசதிகளை அதியுயர்வாக்கும் அதேவேளையில், தற்போதைய நிலைமையைப் பயன்படுத்திக்கொள்வதிலான அவசரம் முக்கியமான விழுமியங்களில் விட்டுக்கொடுப்புகளைச்செய்து, நிலைபேறற்ற அல்லது நீண்டகால நோக்கில் பயனுறுதியற்ற செயல்முறைகள் மற்றும் பொறிமுறைகளில் பாதிப்புற்ற ஜனசமூகங்களைப் பிணைப்பதாக அமையக்கூடுமென்பதையும் மனதில் இருத்துதல் வேண்டும்.

இத்தோடு இணைவுற்ற மேலுமொரு சவால் யுத்தத்தின்போது இடம்பெற்ற பாலியல் வன்புணர்வுகள் மற்றும் பாலியல் கொடுமைகளில் கவனஞ்செலுத்துவது, பெண்களுக்கெதிரான ஏனைய வடிவங்களிலான வன்செயல்களில் மாத்திரமன்றி, போருக்கு வெளியிலான பாலியல் வன்செயல்களிலிருந்தும் கவனத்தைத் திசைதிருப்பிவிடுமா என்பதாகும். இந்த விவகாரத்தின் மறுபக்கம் பெண்களுக்கெதிரான குற்றங்கள் இடம்பெற்றதை ஏற்றுக்கொண்டு வழக்குத் தொடருதல் எந்த அளவுக்கு மேலும் பரந்த நீதிமுறைமையின் தந்தைவழிக் குணாம்சம் மற்றும் அன்றாட வன்செயல் அனுபவங்களை நிலைமாற்றம் செய்யும் என்பதாகும். தனிப்பட்ட முறையிலும், பகிரங்கமாகவும் பெண்களுக்கெதிராக இடம்பெறும் அன்றாட அடக்குமுறையை எந்த அளவுக்கு இடைமாற்றக்கால நீதிச் செயல்முறைகளும், பொறிமுறைகளும் நிலைமாற்றம் செய்யும்?

பொருளாதார மற்றும் பகிர்வுநீதியில் ஓரங்கட்டலென்பது ஒரு பாரதூரமான சவாலாக விளங்குகின்றது. இந்தப் பிரச்சினை பிரத்தியேகமாகப் பெண்களைப் பாதிப்பதோடு, பாதிப்புற்ற ஜனசமூகங்கள் வாழ்ந்து அனுபவித்த யதார்த்தங்களோடு தொடர்பற்ற, குறுகிய நீதி எண்ணக் கருவாக்கங்களையும் கேள்விக்குட்படுத்துகின்றது. அரசும், சிவில் சமூகமும் இடைமாற்றக்கால நீதியின் மொழியைப்பேசுகின்றன. ஆயினும், பொருளாதாரக் கொள்கைகள் தொடர்ந்தும் வளங்களின் பகிர்வைச் சந்தைச் சக்திகளின் கைகளில் வைத்திருப்பதோடு, சில மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் அரசியலமைப்பில் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை எதிர்த்து வருகின்றனர்.

இறுதியாக, இடைமாற்றக்கால நீதிச் செயற்பாட்டாளர்களும், தீவிரமான வேறுபாடுகளைக் கொண்டிருப்பதோடு, அரசியல்ரீதியாக ஆழமாகப் பிளவுற்றுமுள்ளனர். சிலர் இடைமாற்றக்கால நீதிப் பொறிமுறைகளை மேலும் பாரிய அரசியல் நோக்கங்களை ஈட்டிக்கொள்வதற்கான ஒரு வழிமுறையாக நோக்குகின்றனர். ஏனையோர் தம்மில் அவை ஒரு முடிவைக் குறிப்பதாக எண்ணுகின்றனர். ஆயினும் இது வகைப்பொறுப்புக்கான நிறுவனங்களை உருவாக்குதல், ஆழமான இலட்சியக் காட்சி, அர்த்தமுள்ள செயல்முறைகள் மற்றும் வகுப்புவாதப் பதற்றநிலைகளுக்குத் தீர்வுகாணும் பாரிய முயற்சிகளின்றி நிரந்தரமான நிலைமாற்றத்தை ஏற்படுத்தமாட்டாது.

## காலச்சட்டகம்

| | |
|---|---|
| 1948-1949 | 1948 இல் பிரித்தானியாவிலிருந்து சுதந்திரம் பெற்றதைத்தொடர்ந்து ஆயிரக்கணக்கான சமீபத்திய இந்திய வம்சாவளித் தமிழ்மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டு, அவர்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர். |
| 1956 | சிங்களம் மாத்திரம் சட்டம் நிறைவேற்றப்பட்டமை, சிங்களத்தை அரசகரும மொழியாக்கியது. இச்சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து, நூற்றுக்கணக்கான தமிழர்கள் வன்செயல்களில் கொல்லப்பட்டனர். |
| 1958 | ஒரு புதிய தமிழர் எதிர்ப்பு, வன்செயல் அலையில் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டு, மேலும் அதிகமானோர் இடம்பெயர்ந்தனர். |
| 1971 | இடதுசாரித் தேசியவாத மக்கள் விடுதலை முன்னணி ஏற்படுத்திய முதலாவது கிளர்ச்சி கொடுமையான, பரந்த அரச அடக்குமுறையில் நசுக்கப்பட்டது. |
| 1972 | முதலாவது குடியரசு அரசியலமைப்பு பௌத்த மதத்துக்கு முதலிடத்தை வழங்கியது. |
| 1976 | வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் தனியரசுக் கோரிக்கை வலுப்பெற்றபோது, போர் மனப்பான்மை அதிகரித்தபோது, தமிழீழ விடுதலைப் புலிகளின் குழு உருவாகியது. |
| 1977 | தமிழ்ப் பிரதேசங்களில் பிரிவினை கோரும் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்தேர்தல்களில் வெற்றிபெற்றபின்னர் பரந்த அளவிலான தமிழர் எதிர்ப்பு வன்செயல் வெடித்தது. |
| 1978 | 1978 இல் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து புதிய குடியரசு அரசமைப்பு ஏற்று அங்கீகரிக்கப்பட்டு, திறந்த பொருளாதாரத்துக்கான மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. ஜனாதிபதியின் அதிகாரங்கள் காத்திரமான வழிகளில் திரட்டி வலுப்படுத்தப்பட்டன. |
| 1980 | அதிகரித்த அடக்கமுறையுடன், தொழில்சங்கங்கள்மீது எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. |
| 1981 | பொலிஸ் / மற்றும் பாதுகாப்புப் படையினரின் இரகசிய ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணப் பொது நூலகத்துக்குத் தீ வைக்கப்பட்டது. |
| 1983 | LTTE இயக்கம் மறைந்திருந்து 13 படைவீரர்களைக் கொன்றது. இதைத்தொடர்ந்து நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டு, ஆடி மாதப் பின்பகுதியில் ஆயிரக்கணக்கானவர்களின் சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டன. இவை அரசின் ஒத்தழைப்புடனேயே இடம்பெற்றன. பாரிய எண்ணிக்கையினரான தமிழர்கள் வெளிநாடுகளுக்கும் அகதிகளாக வெளியேறினர். |
| 1985 | முதல் விதிமுறையான சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகள் தோல்வியடைந்தன. |
| 1987 | (**LTTE** அமைப்புக்கு ஆதரவளித்த)<br>இந்தியா இலங்கையுடன் ஒரு சமாதான உடன்படிக்கையைச் செய்துகொண்டது. அதிகாரப் பரவலாக்கக் கோரிக்கைக்குப் பதில்நடவடிக்கையாக மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. வடக்கிலும்,கிழக்கின் சில பகுதிகளிலும் இந்திய அமைதி காக்கும் படை நிலைகொண்டது. |

| | |
|---|---|
| | உள்நாட்டு அரசியல் அழுத்தங்கள் காரணமாக இந்தியா அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது. இதன்விளைவாக, இலங்கை அரசாங்கம் சிறுபான்மைத் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிசெய்வதாக இலங்கை அரசாங்கம் வாக்குறுதியளித்தது. அத்தோடு இந்திய அரசாங்கம் தமிழ்ப்போராளிகளின் ஆயுதங்களைக் களைவதற்கான ஒரு பாதையையும் ஏற்படுத்துவதாக வாக்குறுதியளித்தது. |
| 1988-1990 | IPKF மற்றும் LTTE இடையில் பகையுணர்ச்சிகள் தோன்றின. IPKF தமிழ் சிவிலியன்களுக்கு எதிரான பரந்த அளவிலான அட்டூழியங்களைப் புரிந்தனர். இந்திய ஊடுருவலை எதிர்த்து தெற்கிலும், மேற்கிலும் JVP பாரிய கிளர்ச்சிகளை நடத்தியது. கிளர்ச்சி மற்றும் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக ஆயிரக்கணக்கான மரணங்களும், ஆட்கள் காணாமற்போதல் சம்பவங்களும் இடம்பெற்றன. |
| 1990 | IPKF திரும்பிச்சென்றதால் யாழ்ப்பாணம் LTTE கட்டுப்பாட்டினுள் வந்தது. கிழக்கில் ஒரு தொடரான பாரிய படுகொலைகளும், மோதல்களும் இடம்பெற்றன. இவற்றுள் இரண்டு ஏறாவூர் மற்றும் காத்தான்குடிப் பள்ளிவாசல்களில் இடம்பெற்றவையாகும். இவற்றைத்தொடர்ந்து தமிழ் சிவிலியன்களுக்கெதிரான பழிவாங்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. அக்டோபரில் LTTE அமைப்பு வட மாகாணத்திலிருந்து சகல முஸ்லிம்களையும் உடனடியாக வெளியேற்றியது. |
| 1991-1992 | கிழக்கில் யுத்தம் வெடித்ததால் பெருமளிவலான இடப்பெயர்வுகள் ஏற்பட்டன. |
| 1994 | ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சிக்குப்பின்னர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பதவிக்கு வந்தார். முதலாவதும், ஒரேயொருவருமான பெண் ஜனாதிபதி சமாதானத்தை ஏற்படுத்தும் பணிப்பாணையைப்பெற்று, ஒரு பன்மைத்துவ அரசியலமைப்பை ஏற்படுத்தி, யுத்தத்துக்கு முடிவுகட்டும் வகையிலான அரசியல் கருத்தொருமையை ஈட்டிக்கொள்ளமுயன்றார். ஆட்கள் காணாமற்போனமை சம்பந்தமான மூன்று வகை ஆணைக்குழுக்கள் நிறுவப்பட்டன. பின்னர் 1998 இல் ஓர் ‘அனைத்திலங்கை” ஆணைக்குழுவும் நிறுவப்பட்டது. ஆயிரக்கணக்கான பாதிப்புற்றோரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டது. ஆயினும் ஒருசில கீழ்மட்ட இராணுவ ஆளணியினர் மாத்திரமே குற்றத்தீர்ப்புப் பெற்றனர். ஆணைக்குழுவின் பல விதப்புரைகள் பூரணமாக நடைமுறைப்படுத்தப் படவில்லை. |
| 1995-1996 | வடக்கில் யாழ்ப்பாண மாநகரத்தின்மீது இலங்கைப்படைகள் பாரிய தாக்குதல் ஒன்றைத்தொடுத்தனர். விமானக் குண்டுவீச்சும் நடாத்தப்பட்டது. LTTE அமைப்பு பின்வாங்கியது. நூற்றுக்கணக்கான சிவிலியன்கள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமற்போயினர். |
| 1996 | இலங்கையில் மனிதஉரிமைகள் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. பதினொரு படைவீரர்கள் 18 வயதான கிரிஷாந்தி குமாரசாமியைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திக் கொலைசெய்தனர். 1998 இல் வழங்கப்பட்ட ஒரு திருப்புமுனைத் தீர்ப்பில் குற்றஞ்சாட்டப்பட்ட ஆறுபேருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. |

| | |
|---|---|
| 1998-2001 | LTTE கண்டியிலுள்ள இலங்கையின் அதிபுனிதமான பௌத்தமதத் தலத்தின்மீது குண்டுத்தாக்குதலை மேற்கொண்டது. ஜனாதிபதி குமாரதுங்க அரசியல் படுகொலை முயற்சியில் காயமுற்றார். கொழும்பில் சர்வதேச விமானநிலையத்தின்மீது தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்தப்பட்டு, பல ஸ்ரீ லங்கன் விமானசேவை விமானங்கள் அழிக்கப்பட்டன. |
| 2002 | பெப்ருவரி மாதத்தில் இலங்கை அரசாங்கம் LTTE அமைப்புடன் போர்நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. |
| 2004 | 2004 ஆரம்பப்பகுதியில் LTTE அமைப்பு தனது கிழக்குப்போராளியும், படைத் தளபதியுமாகிய நபரிடமிருந்து பிளவுற்றது. இலங்கையில் சுனாமி காரணமாகப் பெருமளவில் மரணங்கள், அழிவுகள் ஏற்பட்டன. |
| 2005 | சுனாமி உதவிகளைப் பகிர்ந்துகொள்வது காரணமாக அரசாங்கத்துக்கும், LTTE அமைப்புக்கும் இடையிலான 2002 போர்நிறுத்தம் முடிவடைந்தது. 2005 டிசம்பரில் LTTE ஒரு தொடரான தாக்குதல்களை நடத்தியது. |
| 2006 | பெப்ருவரி மாதத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட சமாதானப்பேச்சுவார்த்தைகளின் முதலாவது சுற்று இடம்பெற்றது. ஆயினும் அது யூன் மாதத்தில் முடிவடைந்தது. இந்த வருடத்தில் பின்னர் பேச்சுவார்த்தைகள் முற்றாக முறிவடைந்தன. LTTE அமைப்பு கிழக்கில் பாரிய நீர்த்தேக்கத்தின் கதவுகளை மூடியதால், இலங்கை இராணுவம் பாரிய எதிர்த்தாக்குதல்களை நடத்தியது. ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர். |
| 2007 | இலங்கைப்படையினர் LTTE அமைப்பிலிருந்து பிரிந்துசென்ற குழுவுடன் இணைந்து LTTE அமைப்பைக் கிழக்கிலிருந்து வெளியேற்றியது. கிழக்கு விடுவிக்கப்பட்ட பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. |
| 2008 | 2008 மார்ச்சில் பெரிய அளவிலான மனிதஉரிமை மீறல் விடயங்கள் குறித்த விசாரணைகளைக் கண்காணித்துக்கொண்டிருந்த சர்வதேச நியுணர்கள் ஆயம், அதிகாரிகள் தமது பணிக்கு இடையூறு விளைவிப்பதாகக்கூறி நாட்டிலிருந்து வெளியேறினர். இந்த விமர்சனத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.<br>வடக்கில் போர் முகாம்களிலிருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்து தெற்கு நோக்கியும் பாரிய தாக்குதல்கள் டுவுவுநு அமைப்புக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டன. வடக்கினுள்ளும், வட பிரதேசங்களுக்கு வெளியிலும் பாரிய மக்கள் இடம்பெயர்வுகள் ஏற்பட்டன. ஏனைய சிவிலியன்கள் ஆயிரக்கணக்கானோர் யுத்தவலயத்தில் சிக்கிக்கொண்டனர். அரசாங்கம் டுவுவுநு அமைப்பு முதலில் ஆயுதங்களைக் கைவிடவேண்டுமென்று தெரிவித்து, யுத்த நிறுத்தத்துக்கான கோரிக்கையை நிராகரித்தது. செத்தெம்பரில் பல விண்ணப்பங்கள் செய்யப்பட்டபோதிலும், யுத்தவலயத்திலிருந்து ஐ. நா அமைப்பு வெளியேறியது. ஐ.நா. ஆளணியினரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்க முடியாதென்று அரசாங்கம் தெரிவித்ததால் அவர்கள் வெளியேறினர். |

| | |
|---|---|
| 2009 | 2009 மேயில் LTTE தலைமைத்துவம் கொல்லப்பட்டு, யுத்தம் முடிவுக்குவந்தது. தற்காலிக வைத்தியசாலைகளின்மீதும், யுத்தச் சூனிய வலயங்கள்மீதும் அரசாங்கப் படைகள் மேற்கொண்ட எறிகணைவீச்சு, ஆயிரக்கணக்கான சிவிலியன்களின் மரணத்தை விளைவித்ததாகச் சந்தேகம் வெளியிடப்பட்டது.<br>யாழ்ப்பாணக்குடாநாட்டுக்குத் தெற்கிலிருந்த சகல மக்களும் பெரும் துயரங்களுக்கு மத்தியில் இடம்பெயர்ந்தனர்.<br>சரணடைந்த அல்லது சிறைப்பிடிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானோர் காணாமற்போயினர். இதன்பின்னர் வடக்கிலும், கிழக்கிலும் பாரிய இராணுவமயமாக்கல் இடம்பெற்றது. இராணுவம் பெருமளவிலான காணிகளை ஆக்கிரமித்துக்கொண்டது.<br>யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் பாரதூரமான மனிதஉரிமை மீறல்கள் இடம் பெற்றதாக பரந்த அளவிலான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டபோதிலும், இலங்கை ஐ.நா. மனிதஉரிமை மன்றத்தின் சாதகமான தீர்மானத்தைப் பெற்றுக்கொண்டது. |
| 2010-2011 | 2010 இல் ஐ.நா. செயலாளர் நாயகம் போரின் இறுதிக்கட்டங்களில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச்சட்ட மீறல்கள் குறித்த வகைப்பொறுப்பை ஆராய்வதற்காக சர்வதேச நிபுணர்கள் ஆயமொன்றை நியமித்தார். 2011 ஏப்பிரல் மாதத்தில் அது தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. அரசாங்கம் அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தது.<br>2010 இல் அரசாங்கம் 2002 இலிருந்து இடம்பெற்ற யுத்தம் சம்பந்தமான கரிசனை விடயங்களை விசாரணைசெய்வதற்கு கற்றுக்கொண்டபாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை (LLRC) நியமித்தது. பல தேசிய மற்றும் சர்வதேச மனிதஉரிமை அமைப்புகள் ஆணைக்குழுவைப் பகிஷ்கரித்தவேளையிலும், ஆயிரக்கணக்கானோர் ஆணைக்குழுமுன் சான்றளித்தனர். 5,000 க்கு மேற்பட்ட சமர்ப்பணங்கள் இடம்பெற்றன. 2011 இல் LLRC தனது இறுதி அறிக்கையை வெளியிட்டது. பல முக்கிய விந்துரைப்புகள் முன்வைக்கப்பட்டு, பரந்த அளவிலான வரவேற்பைப் பெற்றபோதிலும், அவை மிக மோசமாகவே நடைமுறைக்கிடப்பட்டன. |
| 2011-2014 | ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு நீதி மற்றும் வகைப்பொறுப்பைக்கோரி ஒரு புதிய தீர்மானத்தை முன்வைக்கும் நிகழ்வு வலுப்பெற்றது. 2014 இல் UNHRC, LLRC ஆணைக்குழு விசாரணைசெய்த காலப்பகுதியில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் சம்பந்தமாக விசாரணைசெய்வதற்கு OHCHR அமைப்புக்குப் பணிப்பாணை வழங்கியது. |
| 2015 | ஜனவரியில் இடம்பெற்ற தேர்தலில் ஜனாதிபதி ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டார். ஆகஸ்டில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலைத்தொடர்ந்து, அவரின் கட்சியில் ஒரு பகுதியினர் முன்னாள் எதிர்க்கட்சியுடன் இணைந்து ஒரு தேசிய ஐக்கிய அரசாங்கத்தை அமைக்க உடன்பட்டனர்.<br>முக்கியமான அரசியலமைப்புத்திருத்தங்கள் நிறைவேற்று ஜனாதிபதியின் பதவிக்காலத்தைக் குறைத்து, முன்னாள் ஆட்சிக்குழு கொணர்ந்த பிரதான திருத்தங்களை, மறுதிசையில் மாற்றியமைத்தது. இத்திருத்தங்கள் முன்பு நிறைவேற்று அதிகாரத்தின் செவ்வைபார்த்தல்கள், சமநிலைப்படுத்தல்களைக் குடைகவிழ்ப்பனவாக அமைந்திருந்தன. அரசியலமைப்பு மன்றமும், மனித உரிமைகள் ஆணைக்குழுவும் மீண்டும் தாபிக்கப்பட்டன.<br>இலங்கை வகைப்பொறுப்பை முன்னேற்றும் ஐ.நா.மனிதஉரிமைகள் மன்றத்தின் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியது. இது நான்கு தூண்கள்கொண்ட இடைமாற்றக்கால நீதிச்செயல்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அர்ப்பணிப்புணர்வுகொண்ட ஒன்றாகும். |

| | |
|---|---|
| 2016 | அரசியலமைப்புக் குறித்த கருத்துகளை அறிந்துகொள்வதற்காக அரசியலமைப்பு மறுசீரமைப்புகள் சம்பந்தமான பொதுமக்கள் பிரதிநிதித்துவக்குழுவொன்று ஏற்படுத்தப்பட்டது (PRC). பாராளுமன்றம் ஓர் அரசியலமைப்புப் பேரவையாக மாற்றப்பட்டு 2/3 பங்கு பெரும்பான்மை ஆதரவும், மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பில் அங்கீகாரமும் அவசியப்படும் அரசியலமைப்பொன்றை வரைந்து, அதை நிறைவேற்றுவதே இதன் பணியாகும்.<br><br>பிரதமர் அலுவலகத்தில் மீளிணக்கப்பொறிமுறைகளைக் கூட்டிணைப்புச்செய்யும் செயலகமொன்றும், மீளிணக்கப்பொறிமுறைகள் சம்பந்தமான கலந்தாலோசனைச் செயலணியும் (CTF), நிலைமாற்றக்கால நீதிப்பொறிமுறைகளின் வடிவமைப்பு சம்பந்தமாகப் பொதுமக்கள் கலந்தாலோசனைகளை நடத்தின. CTF 15 வலயச் செயலணிகளைத் தாபித்து, நாடு முழுவதும் விஸ்தாரமான கலந்தாலோசனைகளை நடத்தியது. CTF செயல்முறை பூரணமாகுமுன்னரே அரசாங்கம் காணாமற்போனோர் அலுவலகத்தைத் தாபிப்பதற்கான சட்டமூலத்தை, போதிய கலந்தாலோசனைகளின்றி பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது.<br><br>அரசியலமைப்பு மறுசீரமைப்புச்செயல்முறை தொடருகின்றது. PRC, அரசியலமைப்புப் பேரவையின் உப-குழுக்கள்/பாராளுமன்றம் என்பவை அறிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றன. எவ்வாறாயினும், PRC அறிக்கை விதிமுறையான கலந்துரையாடலுக்காக அரசியலமைப்புப் பேரவையில் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| 2017 | கலந்தாலோசனைச் செயலணி ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் தனது அறிக்கைகளைச் சமர்ப்பித்தபின்னர் அவை விதிமுறையாகப் பகிரங்கப்படுத்தப்படுகின்றன. |

